# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## பட்டு வளர்ச்சித்துறை

# செயலாக்கத்திட்டம்
# 2012 – 2013

©
தமிழ்நாடு அரசு
2013

# பட்டு வளர்ச்சித்துறை

# 2012–2013ஆம் ஆண்டிற்கான செயலாக்கத்திட்டம்

இந்திய அளவில் பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் கீழ்க்காணும் நான்கு முக்கிய செயல்பாடுகளில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது.

★ மாநிலத்தில், 100 பட்டு முட்டைத் தொகுதிகளுக்கான சராசரி பட்டுக்கூடு உற்பத்தி அளவு 69.69 கிலோ கிராம் ஆகும். தேசிய அளவில் சராசரி உற்பத்தி 58.20 கிலோ கிராம்.

★ மொத்த பட்டு முட்டை வளர்ப்பில், 27 விழுக்காடு இளம்புழுக்களாக வளர்த்து விநியோகிக்கப்படுகிறது. இது தேசிய அளவில் அதிகப்படியான சாதனையாகும்.

★ தொகுப்பு அபிவிருத்தி திட்ட செயலாக்கத்தில் இந்திய அளவில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது.

★ மாநிலத்தில் 575.50 மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்து, தேசிய அளவில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது.

## I. 100 முட்டைத் தொகுதிகளுக்கு பட்டுக்கூடு அறுவடை

சமீப ஆண்டுகளாக 100 முட்டைத் தொகுதிகளுக்கு பட்டுக்கூடு உற்பத்தித் திறன் அதிகரித்து வருகிறது. 2008–2009ஆம் ஆண்டு முதல் இவ்வினத்தில் சாதனை விபரம் பின் வருமாறு :

| வ. எண். | வருடம் | 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை (கிலோ கிராம்) |
|---|---|---|
| 1 | 2008-2009 | 64.800 |
| 2 | 2009-2010 | 65.430 |
| 3 | 2010-2011 | 66.000 |
| 4 | 2011-2012 | 68.800 |
| 5 | 2012-2013 | 69.690 |

## II. இளம்புழு வளர்ப்பு மையங்கள்

விவசாயிகள் இளம்புழுக்களை பயன்படுத்தி புழு வளர்ப்பு மேற்கொள்வதின் மூலம் உற்பத்தித் திறன் அதிகரித்து, தோல்வி குறைந்துள்ளது என்பது நிரூபணமான அணுகுமுறையாகும். விவசாயிகள், முட்டைத் தொகுதிகளிலிருந்து புழுவளர்ப்பதைத் தவிர்த்து இளம்புழு பருவத்திலிருந்து வளர்க்கும் முறையானது குறிப்பிடத் தகுந்த அளவு அதிகரித்துள்ளது.

2008–2009ஆம் ஆண்டு முதல் இவ்வினத்தின் சாதனை விபரம் பின் வருமாறு.

| வ. எண் | வருடம் | மொத்த முட்டைகள் வளர்ப்பு (இலட்சம் முட்டைகள்) | இளம்புழுக்களாக வளர்க்கப்பட்டது (இலட்சம் முட்டைகள்) | விழுக்காடு | இளம்புழு வளர்ப்பு மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 2008-2009 | 152.778 | 41.007 | 27 | 35 |
| 2 | 2009-2010 | 131.250 | 35.568 | 27 | 42 |
| 3 | 2010-2011 | 124.028 | 30.744 | 25 | 22 |
| 4 | 2011-2012 | 140.778 | 34.675 | 25 | 22 |
| 5 | 2012-2013 | 114.977 | 31.410 | 27 | 75 |

## III. தொகுப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொகுப்பு அணுகுமுறை

தமிழகத்தில், தொகுப்பு அபிவிருத்தித் திட்டம், 2008–2009 ஆம் ஆண்டு முதல் 2011–2012 வரை, பின்வரும் எட்டு தொகுப்புகளில், மத்திய பட்டு வாரிய உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. பட்டு வளர்ச்சிப்பணிகள், "தொகுப்பு அணுகுமுறை" (Cluster Approach)–யில் கவனம் செலுத்தி முக்கிய பகுதிகளான விதை, பட்டுக்கூடு, பட்டு நூற்பு ஆகிய இனங்களை உள்ளடக்கி செயல்படுத்தப்பட்டன. 2012–2013 ஆம் ஆண்டில் தொகுப்பு அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

- உடுமலைப்பேட்டை (திருப்பூர்)
- பொள்ளாச்சி (கோயம்புத்தூர்)
- கோபிசெட்டிப்பாளையம் (ஈரோடு)
- பவானி (ஈரோடு)
- பேரிகை (கிருஷ்ணகிரி)
- ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி)
- சாணார்பட்டி (திண்டுக்கல்) மற்றும்
- பழனி (திண்டுக்கல்).

தொகுப்பு அபிவிருத்தித் திட்டத்தில், வெண்பட்டு முட்டை வளர்ப்பு, பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வெண்பட்டு உற்பத்தி ஆகிய அனைத்து இனங்களில் அடையப்பட்ட சாதனை விபரம் கீழே தரப்பட்டுள்ளது:

| வ எண் | வருடம் | வளர்த்த முட்டைத் தொகுதிகள் (இலட்சத்தில்) | பட்டுக்கூடு உற்பத்தி (மெட்ரிக் டன்) | பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்) | 100 முட்டை தொகுதிகளுக்கு அறுவடை (கிலோ கிராமில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2008-2009 | 4.425 | 289.400 | 44.500 | 65.400 |
| 2 | 2009-2010 | 11.051 | 766.737 | 122.670 | 69.400 |
| 3 | 2010-2011 | 17.291 | 1204.376 | 192.700 | 69.700 |
| 4 | 2011-2012 | 25.361 | 1845.060 | 295.210 | 72.750 |

## IV. கச்சாப்பட்டு உற்பத்தி

2008–2009ஆம் ஆண்டு முதல் இவ்வினத்தின் சாதனை விபரம் பின்வருமாறு :

| வ. எண் | வருடம் | மொத்த கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | இதில் வெண்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | வெண்பட்டு உற்பத்தி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | 2008-2009 | 1,411 | 377.15 | 26.7 |
| 2 | 2009-2010 | 1,233 | 350.80 | 28.5 |
| 3 | 2010-2011 | 1,182 | 414.00 | 35.0 |
| 4 | 2011-2012 | 1,418 | 592.20 | 41.7 |
| 5 | 2012-2013 | 1,185 | 575.50 | 48.6 |

2012 ஆம் ஆண்டில் நிலவிய வறட்சியின் காரணமாக 2012–2013 ஆம் ஆண்டில் கச்சாப்பட்டு உற்பத்தி கணிசமாக குறைவடைந்துள்ளது.

மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதில், தமிழக விவசாயிகள் முன்னோடியாகத் திகழ்கின்றனர். மாநிலத்தில் தரமான வெண்பட்டு உற்பத்தியைப் பெருக்க போதுமான தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவிகள் உரிய நேரத்தில் பட்டு வளர்ச்சித்துறை மூலமாக அளிக்கப்பட்டு வருகின்றன.

பட்டு வளர்ச்சித்துறையின் முக்கிய செயல்பாடுகள் குறித்த சாதனை விபரங்கள் அட்டவணை எண்.1 முதல் 8 வரை தரப்பட்டுள்ளன.

## 1. மல்பரி விரிவாக்கம்

2012–2013ஆம் ஆண்டில், 5,158.20 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 2008–2009ஆம்ஆண்டு முதல் இவ்வினத்தின் சாதனை பின் விபரம் வருமாறு.

| வ. எண். | வருடம் | சாதனை (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | 2008-2009 | 10,037 |
| 2 | 2009-2010 | 8,031 |
| 3 | 2010-2011 | 7,550 |
| 4 | 2011-2012 | 5,120 |
| 5 | 2012-2013 | 5,158 |

## 2. பட்டுக்கூடு உற்பத்தி

2012–2013ஆம் ஆண்டில், 8,013 மெட்ரின் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2008–2009ஆம் ஆண்டு முதல் இவ்வினத்தின் சாதனை விபரம் பின் வருமாறு :

| வ. எண். | வருடம் | சாதனை (மெட்ரிக் டன்னில்) |
|---|---|---|
| 1 | 2008-2009 | 9,949 |
| 2 | 2009-2010 | 8,588 |
| 3 | 2010-2011 | 8,157 |
| 4 | 2011-2012 | 9,685 |
| 5 | 2012-2013 | 8,013 |

2012 ஆம் ஆண்டில் நிலவிய வறட்சியின் காரணமாக 2012–2013 ஆம் ஆண்டில் பட்டுக்கூடு உற்பத்தி கணிசமாக குறைவடைந்துள்ளது.

## 3. பண்ணை வருவாய்

அரசு பட்டுப்பண்ணைகளின் வருவாயை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் விதைக்கூடு உற்பத்தி, மல்பரி நாற்று உற்பத்தி மற்றும் இளம்புழு வளர்த்து விவசாயிகளுக்கு விநியோகித்தல் முதலான செயல்பாடுகள், சில பண்ணைகளில் சமீப ஆண்டுகளின் சாதனை, அரசு பட்டுப்பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டது.

2008–2009ஆம் ஆண்டு முதல் இவ்வினத்தின் வருவாய் விபரம் பின் வருமாறு:

| வ. எண். | வருடம் | பண்ணை வருவாய் (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1 | 2008-2009 | 51.384 |
| 2 | 2009-2010 | 59.003 |
| 3 | 2010-2011 | 83.526 |
| 4 | 2011-2012 | 72.353 |
| 5 | 2012-2013 | 72.040 |

## 4. 'பட்டு வளர்ச்சி அபிவிருத்தி மற்றும் விலை உறுதிபடுத்தும் நிதி'யின் கீழ் லெவி வசூலித்தல்

2008–2009ஆம் ஆண்டு முதல் வசூலிக்கப்பட்ட லெவி விபரம் பின்வருமாறு:

| வ எண் | வருடம் | வரிவிதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2008-2009 | 133.150 |
| 2 | 2009-2010 | 159.480 |
| 3 | 2010-2011 | 213.437 |
| 4 | 2011-2012 | 157.134 |
| 5 | 2012-2013 | 173.204 |

## 5. மகளிர் பட்டு விவசாயிகளுக்கு நலக்காப்பீடு

சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளின் மூலம் பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பயன் விளைவிக்கும் வகையில், ‘மகளிர் பட்டு விவசாயிகளுக்கான நலக்காப்பீட்டு திட்டம்’ செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், பயனாளிகளின் குடும்பம் உரிமம் பெற்ற மருத்துவமனைகளில் கட்டணமின்றி சிகிச்சைபெற இயலும். ஒரு குடும்பத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.20,000/–க்கு மிகாமல் புற நோயாளியாகவோ, உள்நோயாளியாகவோ மருத்துவ சிகிச்சையை இக்காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் பெறலாம்.

2008–2009 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | வருடம் | பயனடைந்தோர் எண்ணிக்கை | பிரிமியத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | காப்பீடு திட்டத்தின் கீழ் பயனடைந்த நபர்கள் | ஈட்டுத் தொகை பெற்றது (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2008 -2009 | 1,370 | 9.561 | 159 | 3.72 |
| 2 | 2009-2010 | 4,000 | 28.465 | 2,680 | 13.18 |
| 3 | 2010-2011 | 26,000 | 199.494 | 2,527 | 25.93 |
| 4 | 2011-2012 | 20,000 | 153.456 | 244 | 9.44 |

2012–2013 நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 20000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் அவர்களுக்குரிய பிரிமியத் தொகைக்காக ரூ. 156.32 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2011–2012 நிதியாண்டின் காப்பீடு ஜூன் 2013 வரை பயன்பாட்டில் உள்ளதால், 2012–2013 நிதியாண்டு காப்பீடு ஜூன் 2013 –ல் புதுப்பிக்கப்படும்.

## 6. பயிர்க் காப்பீடு

2010 – 2011 நிதியாண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வருடம் | காப்பீட்டில் பயனடைந்தோர் எண்ணிக்கை | காப்பீடு செய்யப்பட்ட முட்டை தொகுதிகள் | பிரிமியத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | காப்பீடு திட்டத்தின் கீழ் பயனடைந்த நபர்கள் | ஈட்டுத் தொகை பெற்றது (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2010-2011 | 5,000 | 6,00,000 | 23.760 | 27 | 5.14 |
| 2 | 2011-2012 | 9,000 | 9,00,000 | 21.780 | 18 | 3.05 |

2012 – 2013 நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 10,000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 15 இலட்சம் பட்டு முட்டைத் தொகுதிகளுக்கு பிரிமியத் தொகைக்காக ரூ. 33.75 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2011–2012 நிதியாண்டின் காப்பீடு ஏப்ரல் 2013 வரை பயன்பாட்டில் உள்ளதால், 2012–2013 நிதியாண்டு காப்பீடு ஏப்ரல் 2013–ல் புதுப்பிக்கப்படும்.

## 7. பட்டுக்கூட்டுக்கு பிந்தைய நிலைப்பிரிவு

பட்டுக்கூட்டுக்கு பிந்தைய நிலைப்பிரிவை வலுப்படுத்த பல்வேறு தரப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிக அளவில் பட்டு நூற்பு அலகுகளை மாநிலத்தில் நிறுவுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2008–2009ஆம் ஆண்டு முதல் ஒப்பளிக்கப்பட்ட பட்டு நூற்பு அலகுகள் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | வருடம் | சர்க்கா / மின் மோட்டார் சர்க்கா | | காட்டேஜ் பேசின் அலகு | | பலமுனை நூற்பு அலகு | | தானியங்கி நூற்பு அலகு | | வெப்பக் காற்று உலர்த்தி | தறிகள் | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அலகு | எனங்கள் | அலகு | எனங்கள் | அலகு | எனங்கள் | அலகு | எனங்கள் | அலகு | எண்ணிக்கை | அலகு | எண்ணிக்கை |
| 1 | 2008-2009 | - | - | - | - | 5 | 50 | 1 | 40 | 15 | - | 21 | 90 |
| 2 | 2009-2010 | - | - | - | - | - | - | 1 | 40 | 3 | 500 | 4 | 540 |
| 3 | 2010-2011 | - | - | - | - | 2 | 20 | - | - | 10 | 6000 | 12 | 6020 |
| 4 | 2011-2012 | - | - | - | - | - | - | - | - | 10 | 5300 | 10 | 5300 |
| 5 | 2012-2013 | | | 10 | 60 | 2 | 20 | - | - | 5 | - | 17 | 80 |

## 8. மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழக அரசு நிதி ஒதுக்கீடு:

மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் மூலமாக கடந்த 5 ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரங்கள் பின் வருமாறு.

| வ. எண் | வருடம் | மத்திய பட்டு வாரியம் (ரூபாய் இலட்சத்தில்) | தமிழக அரசு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2008-2009 | 903.878 | 787.119 | 1,690.997 |
| 2 | 2009-2010 | 829.544 | 574.570 | 1,404.114 |
| 3 | 2010-2011 | 2,234.940 | 1,154.229 | 3,389.169 |
| 4 | 2011-2012 | 1,229.485 | 773.876 | 2,003.361 |
| 5 | 2012-2013 | 1,371.500 | 797.480 | 2,168.980 |